# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

ஆணை நாள் **13.07.2026**

**முன்னிலை**

## முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப (ஓய்வு)
## மாநில தகவல் ஆணையர்

*****

**வழக்கு எண். SA 10389/SCIC/2024**

திருமதி T. கலையரசி — மேல்முறையீட்டாளர்

//எதிர்//

பொதுத் தகவல் அலுவலர்/
காவல்துணை ஆணையாளர், ....... பொதுஅதிகார அமைப்பு
சென்னை பெருநகர காவல் ஆணையரகம்,
E.V.K, சம்பத் சாலை, வேப்பேரி, சென்னை 07

**ஆணை**

| | | |
|---|---|---|
| **1.** | **மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு** | **18.03.2024** |
| 2. | பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 21.03.2024 |
| 3. | மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனு | 10.04.2024 |
| 4. | மேல்முறையீட்டு அலுவலரின் பதில் | 14.05.2024 |
| 5. | மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனு | 13.08.2024 |
| 6. | பின்னர் பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 26.09.2025 |
| 7. | மனுதாரரின் ஆட்சேபனை மனு | 20.11.2025 |

மனுதாரர், பொதுத் தகவல் அலுவலர், காவல்ஆணையர் அலுவலகம், எழும்பூர், சென்னை என்ற முகவரிக்கு அனுப்பிய சட்டப்பிரிவு 6(1)-ன் கீழான 18.03.2024 தேதியிட்ட மனுவில் "1. What is the current designation of Mr. P. Jeethendra Kumar, S/o Paulson, residing at No.22-B, Egavalliyamman Kovil Street, Thiruvottiyur Market, Chennai,

2. What is the Gross salary drawn by Mr P.Jeethendra Kumar as on date? என்ற இரண்டு இனங்களில் தகவல்களை வழங்குமாறு கோரியுள்ளார்.

2. இன்றைய விசாரணைக்கு மனுதாரர் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பில், திரு M. Siddartha Sankar Rai, காவல் உதவி ஆணையாளர், சென்னை ஆணையத்தில் நேரில் ஆஜரானார்.

3. இன்றைய விசாரணைக்கு பொதுத் தகவல் அலுவலர் சார்பில் ஆஜரான அலுவலர், மனுதாரரின் சட்டப்பிரிவு 6(1)ன் கீழான மனுவிற்கு, 21.03.2024, 14.05.2024 மற்றும் 26.09.2025 ஆகிய தேதிகளிட்ட கடிதங்களின் வாயிலாக தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். மனுதாரர் 20.11.2025 தேதியிட்டு தனது ஆட்சேபனைக் கடிதத்தினை ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார். பொதுத் தகவல் அலுவலரால் வழங்கப்பட்ட தகவல்கள் ஆணையத்தால் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டதில், மனுதாரருக்கு வழங்கப்பட்ட தகவல்கள் தவறானது என்பதை ஆணையம் பதிவு செய்கிறது.

4. எனவே, **மனுதாரரின் மனுவில் கோரிய இனங்களுக்கு சரியான / திருத்திய இனவாரியான பதிலினை 15 தினங்களுக்குள் விரைவுத்தபால் மூலமாக மனுதாரருக்கு அனுப்பிவிட்டு, அந்த அறிக்கையுடன் மேற்படி தகவல்களை மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல்துறையின் ஆதாரத்தினையும் 07.08.2026 அன்று பொதுத் தகவல் அலுவலர் சார்பில் ஆஜரான அலுவலர் ஆணையத்தில் நேரில் ஆஜராகி சமர்ப்பிக்க வேண்டும் என்று ஆணையத்தால் உத்தரவிடப்படுகிறது**.

5. மேலும், **மனுதாரர் சட்டப்பிரிவு 6(1)ன் கீழ் 18.03.2024 தேதியிட்டு மனு அளித்துள்ள நிலையில், தற்போது வரையில் அவருக்கு பொதுத் தகவல் அலுவலரால் சரியான தகவல்கள் வழங்கப்படாத காரணத்தினால், இந்நிகழ்வில் ஏற்பட்ட காலதாமதத்திற்காக பொது அதிகார அமைப்பானது சட்டப்பிரிவு 19(8)(b)ன் கீழ் ரூ.1000/- (ரூபாய் ஆயிரம் மட்டும்) இழப்பீடாக மனுதாரருக்கு வழங்குமாறும், மேற்படி இழப்பீட்டு தொகையினை மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அறிக்கையினையும் 07.08.2026 அன்று பொதுத் தகவல் அலுவலர் சார்பில் இன்று விசாரணைக்கு ஆஜரான அலுவலர் ஆணையத்தில் நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு உத்தரவிடப்படுகிறது.**

**ஒம்/-(அதுல்ய மிஸ்ரா)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப்பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 10389/SCIC/2024</u>**

**பெறுநர்**

**பொது அதிகார அமைப்பு**

பொதுத் தகவல் அலுவலர்,
காவல்துணை ஆணையாளர்,
சென்னை பெருநகர காவல் ஆணையரகம்,
E.V.K, சம்பத் சாலை, வேப்பேரி, சென்னை 07

**மனுதாரர்**

Tmt T. Kalaiarasi,
23/57, 6th Street,
Annai Sivagami Nagar,
Ennore, Chennai 600 057

**நகல்**

காவல்துறை தலைமை இயக்குநர்,
காவல்துறை தலைமை இயக்குநர் அலுவலகம்,
மயிலாப்பூர், சென்னை 600 004

பதிவாளர்,
தமிழ்நாடு தகவல் ஆணையம்,
சென்னை 600 035

TK/PS